கண்ணே வண்ணப் பசுங்கிளியே...



பாலகுமாரன்

GOODWILL'S

காதல் என்னும் போர்க்களம்

.....ஜம்புலிங்கம் தெருவில் முன்னும் பின்னும் அலைந்தான். இடம் கண்டுபிடித்தான். பிஎஸ்சி பயோ கெமிஸ்ட்ரி என்றால் எந்த காலேஜ், பானுமதி பிஎஸ்சி பயோ கெமிஸ்ட்ரி என்று கேட்கலாமா. ஒரு பயோ கெமிஸ்ட்ரி புக் வாங்கி அதை பார்ஸல் பண்ணி கொரியர் என்று கொடுக்கலாமா. அந்த யோசனை சரியாக இருந்தது.

“ஏதாவது ஒரு பயோ கெமிஸ்ட்ரி புக் கொடுங்க. பிஎஸ்சி பயோ கெமிஸ்ட்ரி” என்று சொல்ல, கடைக்காரர் விநோதமாக பார்த்தார்.

இருப்பதில் தடிமனான புத்தகம் எடுத்துக்கொண்டான். இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் விலை சொல்லப்பட்டது. பார்சல் செய்து கொண்டான்.ஏதோ இரண்டு மூன்று வெள்ளை ஸ்டிக்கர் ஒட்டி சில பெயர் எழுதினான். பர்சை திறந்து அவனுக்கு வந்த ஒரு பார்சலின் சலானை எடுத்துக்கொண்டான்.

பானுமதி பிஎஸ்சி என்று அந்த கட்டிடத்திற்குள் நுழைந்தான். ஹாலில் காத்திருந்தான். பார்சல் வந்திருக்கிறது என்று சொன்னான். அடிவயிறு குழம்பியது. தொடைகள் நடுங்கின. முதுகு வலித்தது. அடிக்கடி தொண்டை கமறிற்று. முதுகுப்பக்கம் வியர்த்தது.

“அவ தூங்கறா, என்ன வேணும்”

“இந்த பார்சல் கொடுத்துடுங்க. நான் வந்து அப்பால கையெழுத்து வாங்கிக்கறேன்.” என்று சாதாரண சென்னை பாசையில் பேசினான்.

“அப்பால வர்ரிங்களா” வாங்கியவள் கேலி பேசினாள்.

“ஆமாங்க”

அவன் பார்சலை கொடுத்தான். திரும்பிவந்து உடுப்பி ஹோட்டலில் காபி குடித்தான். ச்சே ஏன் தடுக்கிறது என்று கவலை கொண்டான். இரண்டு பெண்களும் பேசிக்கொண்டதில் பானு அவள் தோழி போல் தெரிந்தது. பானு அவளின் தோழி என்றாள்.

அப்போ பானுவிற்கு வயது இருபத்து ஒன்றோ இருபத்தி இரண்டோ. இப்போ ஏன் தூங்கறா. இது அவ தூங்கற நேரம். தூங்குகிற நேரமா ஆச்சர்யமாக இருக்கிறதே. அந்த ஹாஸ்டல் கூச்சலாக இருந்தது. இந்த கூச்சலுக்கு நடுவே தூங்குவது என்றாள் இரவெல்லாம் கண்விழித்து இருக்க வேண்டும். அந்த பானுமதி அழகியா. நல்ல உயரமா. வாளிப்பா. புன்சிரிப்பா. முத்துப்பல்லா. வெள்ளை உடம்பா. மறுபடியும் ஹாஸ்டலுக்குள் போனான்.

“ஏ பானு, அந்த கொரியர் ஆள் வந்திருக்கான். கையெழுத்து வாங்கறதுக்கு”

கீழிருந்து மேல் நோக்கி கத்தினாள். அவன் காத்திருந்தான். மாடியில் நிழல் அசைந்தது.

அவன் முதுகின் மீது குப்பென்று காற்று பரவியது. கால்கள் வலித்தன. கணுக்காலுக்கும் முழங்காலுக்கும் நடுவே உள்ள இடம் மிகுந்த பலவீனத்தை உணர்ந்தது. ஆனால் அவன்

சாதாரணமாக இருக்க முயற்ச்சித்தான். தோற்றான். மெல்ல ஜெயித்தான். காத்திருந்தான். நிழல் அசைவு பெரிதாகியது.

“தோ வந்துடறேன். தோ வந்துடறேன் அக்கா”

அவள் கீழ் இறங்கி அந்த கெமிஸ்ட்ரி புத்தகத்துடன் ஓடி வந்தாள். மஞ்சள் மிடி. கருப்பு கலந்த ஒரு டாப். அழகிய தலை முடி. சிவந்த உடம்பு. கூறிய மூக்கு. அழகிய வில் போன்ற உதடுகள். நீண்ட புருவங்கள். சுடர் போல கண்கள்.

அவன் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. உள்ளுக்குள்ளே சுழன்றது. இத்தனை அழகியா. தனக்கு கவிதை எழுதியது இத்தனை அழகியா. அவன் திகைத்தான்.

‘என்ன வேணும்?’

‘ஒரு சிக்னேச்சர் மேடம்’

அவள் வாங்கி படிக்க முற்பட்டாள்.

‘இந்த இடம் மேடம்’

அவன் மிக அருகில் இருந்தான்.அவள் அவன் காட்டிய இடத்தில் அவன் கொடுத்த பால்பாயின்ட் பேனாவைகொண்டு கையெழுத்துபோட்டாள். அவன் வாங்கிக்கொண்டு நகர்ந்தான். பேனா அவளிடமே இருந்தது. அது அவனுக்கு தெரிந்திருந்தது.

‘ஏய் மிஸ்டர்’

‘என்னங்க’

‘உங்க பேனா’

‘சரிங்க’

அவன் பிச்சை போல கையேந்தினான்.அவன் கையில் அவன் தொட்ட பேனா விழுந்தது. அவன் மெல்ல பையில் செருகிக்கொண்டான். அவள் பிடரிக்குப்பின்னால் குறுகுறுப்பாய் பார்ப்பது தெரிந்தது.

‘கவிஞர் கார்த்திக்’

அவன் உறைந்து பொய் நின்றான். மெல்லதிரும்பினான்.

‘என்ன மேடம்?’

‘நீங்க கவிஞர் கார்த்திக்தானே. முகநூல்ல எழுதறவர் தானே.’

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. எப்படி கண்டுபிடித்தாள். திகைத்தான். ஒவ்வொரு மனிதனும் வாழ்நாளில் போர்க்களத்தை சந்தித்தே ஆக வேண்டும். இது போர்க்களம். காதல் என்னும் போர்க்களம்.....